

அமைச்சர்கள் இரா.இராஜேந்திரன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் சமுதாய அளவிலான புற்றுநோய் கண்டறியும் திட்டத்தின் விரிவாக்க காணொலிக் காட்சியினை சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நேற்று (15.05.2025) வெளியிட்டார்கள். உடன்,துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, , தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மருத்துவர் அருண் தம்புராஜ், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் .டி.எம்.செல்வகணபதி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சியகம் இயக்குநர் மரு.ஜே.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.ஜெ.ராஜமூர்த்தி, பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.டி.எஸ்.செல்வவிநாயகம் உள்ளிட்ட தொடர்புடைய மருத்துவத் துறையினர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பள்ளத்திவிடுதி கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் சூறைக்காற்றால் சேதமடைந்துள்ள வாழை மரங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வின்போது இணை இயக்குநர் (வேளாண்மை) திருமதி மு.சங்கரலட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. பங்கேற்பு!

# சென்னை தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்-அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, மே 16 -

சென்னைத் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார். அது வருமாறு

சென்னை தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் நாளை (17.05.2025 - சனிக்கிழமை) நண்பகல் 12 மணி அளவில், சைதை எம்.சி.ராஜா விடுதி அருகில் உள்ள சாய் கிருஷ்ணா ஏ.சி.



மினி ஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமை தாங்குகிறார்.

இக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா, எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

ஆகவே இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக் குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி மற்றும் ஒன்றியக்கழகச் செயலாளர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: கழக ஆக்க பணிகள்

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

### ஆ.இராசா எம்.பி. பங்கேற்பு!

# சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயற்குழு ஆலோசனை கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, மே 16-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

சென்னை தென்மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் நாளை (17.5.2025 -சனிக்கிழமை 11:30 மணிக்கு சைதாப்பேட்டை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

இந்த கூட்டத்தில் மாநில அணி செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,



பகுதி செயலாளர்கள், மாவட்ட அணிகளின் சார்ந்த அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கிறோம்.

இதில் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்தும் தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு மாவட்ட செயலாளர் மயிலை வேலு எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஆ. ராசா எம்.பி. ஆலோசனை வழங்குகிறார்

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

### கழகப் பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி.- ஆர். எஸ். பாரதி பங்கேற்பு ! அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு !

காஞ்சிபுரம், மே 16 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் 21.5.2025 புதன்கிழமை காலை 9.00 மணியளவில் குன்றத்தூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் உள்ள அறிஞர் அண்ணா கூட்ட அரங்கில், மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி அவர்கள் தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி,எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில், கழக மண்டல பொறுப்பாளர் ஆ.ராசா அவர்கள் கலந்துக் கொண்டு 2026 சட்டமன்ற தேர்தலில் கழகத்தினர் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்குகிறார். கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு மற்றும் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ் பாரதி ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

கழக நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள்-முன்னாள் உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் பணிகள் சம்மந்தமாக

கழக வளர்ச்சிப் பணி.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

# பெரம்பூர் வடக்கு பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் அ.முருகன் அறிவிப்பு

சென்னை, மே 16 -

பெரம்பூர் வடக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் இன்று (16-05-2025) மாலை 5 மணி அளவில் பகுதி செயலாளர் அ. முருகன் தலைமையில் எண்.221 8வது குறுக்கு தெரு மகாகவி பாரதி நகர் சென்னை 39 நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் பெரம்பூர் தொகுதி பார்வையாளர் கன்னிகை கோ.ஸ்டாலின் கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

ஆகவே இக்கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள் வட்டக் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: பூத் கமிட்டியில் இருந்து செல்போன் மற்றும் சமூக ஊடகங்களில் பரிச்சியமிக்க BLC ஒருவரை தேர்ந்தெடுத்தல்.

இவ்வாறு பகுதி செயலாளர் அ. முருகன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

